**சார்பு நீதிமன்றம், தாராபுரம்**

**OS.No.105/2026**

2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28 ஆம் நாள் வெள்ளிக்கிழமை வா.சா.1 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திரு.கே.சக்திவேல், எம்.ஏ., எல்.எல்.எம், சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு உறுதி கூறப்படுகிறது. சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | லீலாவதி | க/பெ.: | சோமசுந்தரம் |
| கிராமம்: | கொக்கம்பாளையம் | தாலுக்கா: | தாராபுரம் |
| மதம்: | இந்து | தொழில்: | விவசாயம் |
| வயது: | 58 | முகவரி: | பெரியதட்டான்தோட்டம், எடையாபட்டி, தாராபுரம், திருப்பூர். |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on the day of 28.08.2026.

<u>முதல் விசாரணை :–</u>

நான் வழக்கில் வாதி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள விவரங்கள் நான் சொன்னதுதான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். என் தரப்பு சான்றாவணங்களாக, கீழ்கண்ட ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது. ஆகவே, தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 12.11.2023 | தாவா புரோநோட்டு – அசல் |
| வா.சா.ஆ.2 | 21.02.2026 | வாதி தனது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதி வீட்டு முகவரிக்கு அனுப்பிய பதிவுத்தபால் அறிவிப்பின் நகல் |
| வா.சா.ஆ.3 | 23.02.2026 | பதிவுத்தபால் அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக இணையவழி அத்தாட்சி |
| வா.சா.ஆ.4 | 24.02.2026 | பிரதிவாதி தனது வழக்கறிஞர் மூலம் வாதி வழக்கறிஞருக்கு அனுப்பிய பதில் அறிவிப்பின் அலுவலக நகல் |

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

(ஒப்பம்.கு.சக்திவேல்)
சார்பு நீதிபதி,
தாராபுரம்.